# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in


எண். 07 / 2009
நாள். 14–05–2009

## செய்திக் குறிப்பு

பொருள் : கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி மின் சக்தியைக் கொள்முதல் செய்வதற்கான மின் கட்டணவீதத்தை நிர்ணயித்தல்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சம்மந்தப்பட்டவர்கள் (Stakeholders) அனைவருடனும் கடந்த ஒன்பது மாதங்களாக கலந்தாய்வு செய்து கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி மின் சக்தியைக் (Bagassee based Co-generation Power)கொள்முதல் செய்வதற்கு மின் கட்டணவீதத்தினை யூனிட் ஒன்றுக்கு ரூ.3.15 –லிருந்து ரூ.4.38–ஆக அதிகரித்துள்ளது. ஆணையத்தினால் மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்த மின் கட்டணவீதம் நிர்ணயிக்கப்பட்டது. நாட்டில் கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி மின் சக்தியின் நிறுவுதிறன் 1034 மெகாவாட் ஆகும். இதில் தமிழ்நாட்டின் கணக்கு ஏறக்குறைய அந்தத் திறனில் பாதிஅளவு ஆகும். கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகியவை இதற்கு அடுத்த நிலையில் உள்ளன.

2. தற்போதைய மின் கட்டணவீத ஆணை, 16–07–2008 அன்று வல்லுநர்களின் வட்டமேஜை மாநாட்டில் விரிவான கலந்தாய்வு நடைமுறை செய்த பின்பு முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆணையம், சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக, 12–12–2008 அன்று கலந்தாய்வு ஆவணத்தை (Consultative Paper) வெளியிட்டது. 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் ஷரத்துக்களின்படி 26–02–2009 அன்று மாநில ஆலோசனைக்குழு கூடி அந்த ஆவணம் குறித்து ஆலோசனை அளித்தது. அந்தச் சட்டத்தின் 64ஆம் பிரிவிற்கிணங்க ஆணையத்தினால் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் 05–03–2009 அன்று நடத்தப்பட்டது.

3. கரும்புச் சக்கை மூலமான உற்பத்திச் செலவின் அதிகரிப்பின் பொருட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி நிலையங்களின் பயன்பாட்டுத் திறன் வெகுவாகக் குறைந்துள்ளது. 2006–07 ஆண்டின் போது பயன்பாட்டுத்திறன் 10 விழுக்காட்டிலிருந்து 74 விழுக்காடாகவும் மற்றும் 2007–08 ஆண்டின் போது 13 விழுக்காட்டிலிருந்து 63 விழுக்காடாகவும் இருந்தது. 2008–09 (2009 ஜனவரி வரையில்) பயன்பாட்டுத்திறன் 4 விழுக்காட்டிலிருந்து 48

விழுக்காடாகக் குறைந்தது. கரும்புச் சக்கையைக் கொள்முதல் செய்யும் முக்கியமான போட்டியாளர் காகித ஆலைகளாகும். அவை உயர்ந்த விலை கொடுப்பதற்கு தயாராகவுள்ளன. ஆணையம், இந்த போட்டித் தேவையைக் கவனத்திற்கொண்டு, எரிபொருள் செலவினை ரூ.575/– என்றிருந்ததை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.1000/– என்று இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளது.

4. இது குறித்து, தமிழ்நாடு மின்சார வாரியம், இணை மின் உற்பத்தி நிலையங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.7.40 என்று மின் சக்தியைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்புதலுக்காக ஆணையத்தின் முன்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி மின் சக்தியைக் கொள்முதல் செய்வதற்கான மின் கட்டணவீதத்தினை யூனிட் ஒன்றுக்கு ரூ.4.38 என்று, தமிழ்நாடு மின்சார வாரியம் குறிப்பிட்டவாறான யூனிட் ஒன்றுக்கு ரூ.7.40 என்பதை விட மிகவும் குறைவாக நிர்ணயித்துள்ளது. ஆணையம், இணை மின் உற்பத்திக்கான பயன்பாட்டுத்திறனை 55 விழுக்காடாகக் கருதியுள்ளது. ஆணையம், மூலப் பொருள் செலவின் ஏற்ற இறக்கத்தினை கவனத்திற்கொண்டு இரண்டு பங்கு மின் கட்டணவீதத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு பங்கு மின் கட்டணவீதமுறை ஆந்திரப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிறிது காலமாக பழக்கத்தில் இருந்து வருகிறது.

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்